THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

Wednesday, the 9th September 1970.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, the Deputy Chairman (THIRU G. KRISHNAMOORTHY) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS

Sri Pushpam College, Poondi

*91. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether it is a fact that the students of Sri Pushpam College, Poondi, Tharjavur district threw stones on a train during March, 1970 during College day celebration and injured the driver ; and

(*b*) if so, the action taken to prevent such occurrences in future ?

ஸ்ரீ புஷ்பம் கல்லூரி

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பூண்டியில் உள்ள ஸ்ரீ புஷ்பம் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் 1970, மார்ச்சில் கல்லூரி நாள் விழாவின்போது ரயில் வண்டி மீது கல்லெறிந்து, வலவரை (Driver) காயப்படுத்திஞரா ?

(இ) ஆம் எனில், வருங்காலத்தில் அத்தகைய நிகழ்ச்சிகள் நிகழாத வண்ணம் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) இல்லே.

(இ) கேள்விக்கு இடமில்லே.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்த மார்ச் மாதம் கல்லூரி நாள் விழாவின்போது பூண்டி புஷ்பம் கல்லூரி மாணவர்கள் ரயில் மீது கல் எறிந்ததாகப் பத்திரிகையில் செய்தி வந்தது. அப்போது நான் தஞ்சையில் இருந்தேன். என்னிடமே நேரில் வந்து சொன்ஞர்கள். 1967 லிருந்து இதுவரை 15 அல்லது 20 தடவை தஞ்சை-நாகூர் ரயில் அந்த மாணவர்களால் நிறுத்தப்பட்டிருக்கிறது. நான் இந்தப் புகைவண்டி உபயோகிப்போர் சங்க உறுப்பினன் என்ற முறையில் அந்த ரயிலில் செல்கிற பிரயாணிகள் அவதிப்படுவதைச் சொல்லக்

கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வழியில் செல்லும் ரயில் பிரயாணிகள் துயரத்தைப் போக்கும் முறையில் தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : 1970 மார்ச்சு 18ம் தேதி புஷ்பம் கல்லூரியினுடைய கல்லூரி நாள் விழா நடைபெற்றது. அந்த விழாவிற்கும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிக்கும் சம்பந்நம் இல்லை. விழா தொடங்கி ஐந்து மணி நேரம் அமைதியாக விழா நடைபெற்றிருக்கிறது. விழாவில் கலந்துகொண்ட முன்னாள் கவர்னராக இருந்த திரு. சந்தானம் அவர்களும் கடைசி வரையில் இருந்திருக்கிறார்கள். அந்த விழா நடைபெற்ற இடத்திற்கும் குடிகாடு புகைவண்டி நிலையத்திற்கும் இரண்டு அல்லது மூன்று பர்லாங்கு தூரமிருக்கிறது. இந்த விழாவை ஒட்டி அந்த நிகழ்ச்சி நடைபெறவில்லை. ரயிலில் கல் எறிந்ததால் ஃபையர் மேனுக்குக் காயம் பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. புஷ்பம் கல்லூரி மாணவர்கள்தான் செய்தார்களா என்பதற்கு அடிப்படை ஆதாரம் இல்லை. பலரும் அந்த வண்டியில் சென்றிருக்கிறார்கள். போலீசார் பிறகு அதுபற்றி வழக்குப் பதிவு செய்து யார் மீது எந்த வழக்கையும் தொடரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கேள்வி கேட்டபோது, அதில் அந்த நிகழ்ச்சியில் மாணவர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பது போல இருந்ததால், அதற்குத்தான் இல்லை என்று பதில் சொன்னேன். நிகழ்ச்சிக்கும் அந்த விழாவிற்கும் சம்பந்தமில்லை. நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. ஆனால் யார் அதில் தொடர்புள்ளவர்கள் என்று தெரியவில்லை. மாணவர்கள்தான் செய்தார்கள் என்று சொல்ல முடியவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : இதற்குமுன்பு புஷ்பம் கல்லூரி மாணவர்கள் பல தடவைகள் அந்த ரயிலை நிறுத்தியிருக்கிறார்கள். அந்த நிகழ்ச்சிகளை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றுதான் சொன்னேன். அந்த விழாவின்போது என்று செல்லியிருக்கிறேன். தொடர்பு படுத்தவில்லை. இப்படி அடிக்கடி நிகழ்ச்சிகள் ஏற்படுவதால், ரயிலில் பிரயாணம் செய்கிறவர்கள் அவதிப்படுகிறார்கள். அதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மாணவர்களுடைய குறைபாடுகளை அறிந்து புகைவண்டி-ரயில்வே அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு எந்த வகையில் சுமுகமாக அவர்கள் கோரிக்கையைத் தீர்ப்பது என்ற முயற்சியை அரசு மேற்கொள்ளும்.

திரு. எம். ராஜா அய்யர் : ரயில் நிலையத்திற்குப் பக்கத்தில் கல்லூரிகள் அமையாதபடி அரசாங்கம் பார்த்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : பல இடங்களில் புகைவண்டி நிலையத்திற்கு அருகிலேயே கல்லூரி வைக்கவேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. மாணவர்கள் வந்து சேருவதற்கும் அது அருகில் இருப்பது நல்லது என்று கருதப்படுகிறது. ஆகையால் இப்படிப்பட்ட சில தீமைகளும் பல நன்மைகளும் இருக்கின்றன. அதில் உள்ள நன்மைகளைத்தான் நாம் அதிகமாகப் பார்க்கவேண்டியிருக்கிறது.